**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006**
**தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு – ஆகஸ்ட்–2025**
**செய்திக்குறிப்பு**

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

ஆகஸ்ட் 2025–ல் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு 01.08.2025 அன்று 12 ½ வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் 10.07.2025 பிற்பகல் முதல் 17.07.2025 வரை **(ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Service Centres) நேரில் சென்று online மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/–மொத்தம் ரூ.195/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாகச் செலுத்த வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 18.07.2025 மற்றும் 19.07.2025 ஆகிய நாட்களில் (இரண்டு நாட்கள்) தேர்வு கட்டணத்துடன் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகையான ரூ.500/– ஐ கூடுதலாகச் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.**

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை**

➢ **முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**
- விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பள்ளி பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

➢ **ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**
- ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/ சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
- தனித்தேர்வர்கள் ரூ.42/– க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

**இணைப்பு** : தேர்வு கால அட்டவணை

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் :** சென்னை–600 006
**நாள் :** 25.06.2025

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006

## தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு

## ஆகஸ்ட் – 2025

### தேர்வுக்கால அட்டவணை

| தேதி | கிழமை | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 18.08.2025 | திங்கட்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | தமிழ் |
| 19.08.2025 | செவ்வாய்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | ஆங்கிலம் |
| 20.08.2025 | புதன்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | கணிதம் |
| 21.08.2025 | வியாழக்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | அறிவியல் |
| 22.08.2025 | வெள்ளிக்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | சமூக அறிவியல் |

ஓம்/–
இயக்குநர்

இடம்: சென்னை–6
நாள்: 25.06.2025